**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28–ஆம் தேதி வியாழக்கிழமை**

**இ.ம.எண்.2/2023 இன்**

**இ.ம.எண்.1/2022 இன்**

**அ.வ.எண்.225/2022**

P.சக்திவேல் ...மனுதாரர்/
உரிமை கோருபவர்/
3–ம் நபர்

/எதிர் /

P.யோகநாதன் ...எதிர்மனுதாரர்/
வாதி

K.வாசு
V.கார்த்திக் ... எதிர்மனுதாரர்கள்/
2, 3 பிரதிவாதிகள்

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் இம்மனுவானது கட்டளை 38 விதி 8, 10 மற்றும் பிரிவு 151 சி.பி.சி.–ன் படி, எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.1/2022 மனுவில் கண்டுள்ள 2–வது இலக்க சொத்தைப் பொறுத்து கடந்த 03.08.2022–ம் தேதி அன்று பிறப்பிக்கப்பட்ட பற்றுகையை நீக்கம் செய்யக்கோரி மனுதாரர்/மூன்றாம் நபரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | : | 08.09.2023 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 25.08.2025 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 28.08.2025 |
| மனுதாரருக்காக | : | திரு.M.தமிழ்ச்செல்வன் – வழக்கறிஞர் |

முதல் எதிர்மனுதாரருக்காக : திரு.S.சுதாகர் – வழக்கறிஞர்

இரண்டு, மூன்று
எதிர்மனுதாரர்களுக்காக : R.M.செந்தில் – வழக்கறிஞர்

**1) திருத்தப்பட்ட மனுவின் சுருக்கம் :–**

**(அ)** இம்மனுவின் மனுதாரர் இ.ம.எண்.1/2022 மனுவில் உரிமை கோருபவர்/மூன்றாம் நபர். முதல் எதிர்மனுதாரர்/வாதியிடம் இரண்டு, மூன்று எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ரூ.2,00,000/– கடனாக பெற்றுக்கொண்டு, மேற்படி கடன் தொகைக்கு 12% வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு, அதற்காக புரோநோட்டு பிறப்பித்துக் கொடுத்ததற்கு பின்னிட்டு, மேற்படி தொகையினை திருப்பி செலுத்தாத காரணத்தினால் முதல் எதிர்மனுதாரர்/வாதியானவர், இரண்டு, மூன்று எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் மீது அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அத்துடன் மேற்படி இரண்டு, மூன்று எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பற்றுகை செய்யக்கோரி இ.ம.எண்.1/2022 மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவில் கண்ட 2–வது லக்க சொத்து பற்றுகை செய்யப்பட்டுள்ளது.

**(ஆ)** இம்மனுவின் மனுதாரர்/மூன்றாம் நபர் மேற்படி இ.ம.எண்.1/2022 மனுவில் கண்ட இரண்டாவது இலக்க சொத்தை கடந்த 29.08.2003–ம் தேதி கிரையம் பெற்றுள்ளார். மேற்படி மனுதாரர்/மூன்றாம் நபர் நல்லெண்ண கிரையதாரர். எனவே, எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.1/2022 மனுவில் கண்டுள்ள 2–வது இலக்க சொத்தைப் பொறுத்து கடந்த 03.08.2022–ம் தேதி அன்று பிறப்பிக்கப்பட்ட பற்றுகையை நீக்கம் செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) முதல் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரரின் மனு பொய்யானது மற்றும் மோசடியானது. எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. உரிய சட்ட விதிகளை பின்பற்றியே இ.ம.எண்.1/2022 உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனு சொத்தின் ஒரு பகுதியை மனுதாரர் கிரையம் பெற்றுள்ளார் என்கின்ற சங்கதியை மனுதாரரே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர். பற்றுகை செய்யப்பட்ட காலக்கட்டத்தில் வருவாய்த்துறை ஆவணங்கள் இரண்டாவது எதிர்மனுதாரர் பெயரிலேயே இருந்தது. மனு சொத்தானது நாளது தேதி வரை உட்பிரிவு எதுவும் செய்யாமல் நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரருக்கு இம்மனுவை தாக்கல் செய்ய எந்த முகாந்திரமும் இல்லை. மனுதாரர் தனியாக தான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். இரண்டு, மூன்று எதிர்மனுதாரர்கள், மூன்றாம் நபருடன் சேர்ந்து முதல் எதிர்மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய தொகையை மோசடி செய்ய வேண்டும் என்கின்ற நோக்கத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரின் மனுவினை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரியுள்ளார்.

**3) மூன்றாம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, இரண்டாம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாக இல்லை. மனுதாரருக்கு சொத்தில் உரிமை இருக்கும் பட்சத்தில் தனிப்பட்ட நடவடிக்கைகளின் வாயிலாக மேற்கொள்ள வேண்டும். இ.ம.எண்.1/2022 மனுவினை நீதிமன்றம் சரியாக பரிசீலனை செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது. மனுதாரர் தூய்மையான கரத்துடன் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்பதால் மனுதாரரின் மனுவினை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரியுள்ளார்.

**4)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். இருதரப்பிலும் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர் தரப்பில், ம.சா.ஆ.1 முதல் 7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில், எ.ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5)** மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், மனுதாரர் அவரது மனுவினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்துள்ளதால், மனுதாரர் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

**6)** எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், மனுதாரர் அவரது மனுவினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்யவில்லை என்பதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார்.

**7)** **<u>தீர்வு :–</u>**

**(அ)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. ஒரு யோகநாதன் (வாதி) என்பவரிடம் வாசு (முதல் பிரதிவாதி), கார்த்தி (இரண்டாவது பிரதிவாதி) ஆகியோர்கள் ரூ.2,00,000/– கடனாக பெற்றுக்கொண்டு, மேற்படி கடன் தொகையினை திரும்ப செலுத்தாத காரணத்தினால், மேற்படி தொகையை வசூலிக்க கோரி அ.வ.எண்.225/2022 என வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு தாக்கல் செய்த அன்றே மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பற்றுகை செய்யக் கோரி இ.ம.எண்.1/2022 என மனு தாக்கல் செய்யப்பட, மேற்படி மனுவில் பிரதிவாதிகள் ஆஜராகாத காரணத்தினால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, இ.ம.எண்.1/2022–ல் கண்டுள்ள இரண்டு இலக்க சொத்துக்களை கடந்த 03.08.2022–ம் தேதி பற்றுகை செய்ய உத்தரவிடப்பட்டதன் அடிப்பைடியில், மேற்படி இ.ம.எண்.1/2022–ல் கண்ட

சொத்தானது இந்நீதிமன்றத்தால் கடந்த 16.08.2022—ம் தேதி பற்றுகை செய்யப்பட்டுள்ளது.

**(ஆ)** இந்நிலையில், ஒரு சக்திவேல் என்கின்ற மூன்றாம் நபர் மேற்படி இ.ம.எண்.1/2022 மனுவில் கண்டுள்ள 2—வது இலக்க சொத்தானது மேற்படியாருக்கு 29.08.2003 கிரைய ஆவணத்தின் படி பாத்தியப்பட்டதாகவும், எனவே, மேற்படி சொத்தினை அவர் அனுபவம் செய்து வருவதாகவும், அதனால் மேற்படி சொத்தினை பற்றுகை செய்ததை நீக்கரவு செய்ய வேண்டும் என முதல் எதிர்மனுதாரர்/வாதி மற்றும் இரண்டு, மூன்று எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் மீது இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(இ)** மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.2 ஆவணத்தினை பரிசீலனை செய்த வகையில், மேற்படி மனுதாரர்/மூன்றாம் நபரான சக்திவேல் தகுந்த பிரதி பிரயோஜனத்தின் பேரில் இ.ம.எண்.1/2022 மனுவில் கண்டுள்ள சொத்தினை கிரையம் பெற்றுள்ளார் என்கின்ற சங்கதியை அறிந்து கொள்ள முடிகின்றது. மேற்படி இ.ம.எண்.1/2022 மனுவில் கண்டுள்ள சொத்தானது மனுதாரர்/3—ம் நபருக்கு பாத்தியப்பட்டது என்பதால் மேற்படி இ.ம.எண்.1/2022—வில் கண்டுள்ள சொத்தினை பொறுத்து பற்றுகையை நீக்கம் செய்ய வேண்டியது அவசியமாகும். அசல் வழக்கின் பிரதிவாதிகள் மேற்படி சொத்தானது அவர்களுக்கு பாத்தியப்பட்டது என எவ்வித எதிர்வாதமும் புரியவில்லை. மனுதாரர்/மூன்றாம் நபர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், நம்பதகுந்ததாகவும் உள்ளது. தரப்பினர்களால் எழுப்பப்பட்டுள்ள இதர சங்கதிகளை இம்மனுவில் இத்தருணத்தில் விரிவாக விவாதிக்க இயலாது. எனவே, இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, இம்மனுவை அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

**8) முடிவாக,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை. கடந்த 03.08.2022—ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தால் இ.ம.எண்.1/2022 மனுவில் கண்டுள்ள சொத்துக்களை பற்றுகை செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில், கடந்த 16.08.2022—ம் தேதி பற்றுகை செய்யப்பட்ட

நிலையில், மேற்படி இ.ம.எண்.1/2022 மனுவில் கண்ட இரண்டாவது இலக்க சொத்தை பொறுத்து மட்டும் பற்றுகையை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. மேற்படி பற்றுகையை ரத்து செய்ய படி செலுத்த 5 நாட்கள் கால அவகாசம். அழைக்க வாய்தா : **08.10.2025**

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/– (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி,
குளித்தலை.

**மனுதாரர் தரப்பு சாட்சி :–** இல்லை
**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :–**

ம.சா.ஆ.1 22.11.2022–ம் தேதிய மனு
ம.சா.ஆ.2 29.08.2003–ம் தேதிய கிரையப்பத்திரம் – கணினி நகல்
ம.சா.ஆ.3 30.11.1985–ம் தேதிய பாகப்பிரிவினை பத்திரம் – நகல்
ம.சா.ஆ.4 11.10.2002 பொது அதிகார ஆவணம் – நகல்
ம.சா.ஆ.5 வில்லங்க சான்று
ம.சா.ஆ.6 மனுதாரரின் ஆதார் அட்டை – நகல்
ம.சா.ஆ.7 16.12.2022 தேதிய தகவல் அறிவிப்பு

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி :–** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :–**
எ.ம.சா.ஆ.1 01.09.2022–ம் தேதி அன்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P(MD) No.20688 of 2022–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு

ஒப்பம்/– (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி,
குளித்தலை.